بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *16/05/2025* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

- ❖ **சில படையெடுப்புகளின் பின்னனியில் பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள்**
- ❖ **இரு மர்ஹூம்களைப் பற்றிய நற்குறிப்பு**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۝ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۝ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۝ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۝ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۝

இன்றும் படையெடுப்புகள் பற்றிய குறிப்பை எடுத்துக் கூறுவேன். அதற்குப் பிறகு வேறொரு கருத்தை எடுத்துரைப்பேன்.

**கஸிரா எனுமிடத்தை நோக்கி அனுப்பி வைக்கப்பட்ட ஹஸ்ரத் அபூ கதாதா அன்சாரி (ரலி) அவர்களின் படையெடுப்பைப் பற்றிய குறிப்பு காணக் கிடைக்கிறது.** இந்த படையெடுப்பு ஷஅபான் மாதம் ஹிஜ்ரீ எட்டாம் ஆண்டு நிகழ்ந்தது. இங்கு பனூ கத்ஃபானுடைய ஒரு கிளைக் கோத்திரம் குடியிருந்தது. நஜது பகுதியில் கஸிரா எனுமிடத்தில் வசித்து வந்த பனூ கத்ஃபான் மதீனத்து ஆட்சிக்கெதிராக குழப்பத்தை பரப்புவதில் மூழ்கி இருந்தார்கள். இந்த படையெடுப்புக்காக சஹாபிகள் 15 இரவுகள் (மதீனாவுக்கு) வெளியே இருந்தார்கள் என்றும், 200 ஒட்டகங்களையும், ஓராயிரம் ஆடுகளையும், பல கைதிகளையும் கொண்டு வந்தார்கள் என்றும் ஓர் அறிவிப்பில் வருகிறது.

**பிறகு, இஸம் எனும் பள்ளத்தாக்கை நோக்கி அனுப்பி வைக்கப்பட்ட ஹஸ்ரத் அபூ கதாதா (ரலி) அவர்களின் படையெடுப்பைப் பற்றிய குறிப்பு காணக் கிடைக்கிறது.** இந்த படையெடுப்பு ரமலான் மாதம் ஹிஜ்ரீ எட்டாம் ஆண்டு அதாவது கி.பி 630 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நிகழ்ந்தது. இந்த படையெடுப்புக்கான காரணம் என்னவென்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் மக்காவை வெற்றி கொள்வதற்காக மக்காவை நோக்கி புறப்பட எண்ணம் கொண்டபோது ஹஸ்ரத் அபூ கதாதா (ரலி) அவர்களை இஸம் எனும் பள்ளத்தாக்கை நோக்கி அனுப்பி வைத்தார்கள். இது மதீனாவின் கிழக்கு திசையில் இருந்தது. மக்காவுக்கு தெற்கு திசையில் இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் புறப்படுவது மக்காவை நோக்கி கிடையாது; மாறாக இஸம் எனுமிடத்தை நோக்கி இருக்கும் என்று அதன் மூலம் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அவ்வாறு அனுப்பி வைத்திருந்தார்கள்.

ஓர் அறிவிப்பின் அடிப்படையில், இந்த படைக்கு தளபதியாக ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீ ஹத்ரத் (ரலி) அவர்கள் இருந்தார்கள் என்று வருகிறது.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீ ஹத்ரத் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நாங்கள் இஸம் பள்ளத்தாக்கை சென்றடைந்த போது அங்கு ஆமிர் பின் அஸ்பத் அஷ்ஜஈ என்பவர் எங்களை கடந்து செல்லும்போது இஸ்லாமிய முறைப்படி சலாம் கூறினார்.

அதைக் கண்ட முஸ்லிம்கள் அவருக்கெதிராக கை ஓங்குவதை விட்டு விலகிக் கொண்டார்கள். ஆனால், ஹஸ்ரத் முஹல்லிம் பின் ஜஸாமா லைஸீ (ரலி) அவர்களுக்கு அந்த நபருடன் ஏற்கனவே ஏதோ சண்டை இருந்தது. ஆகவே அவர்கள் ஆமிர் பின் அஸ்பத் மீது தாக்குதல் நடத்தி அவரை கொன்று விட்டார்கள். மேலும், அவருடைய பொருட்களையும் ஒட்டகத்தையும் கையகப்படுத்திக் கொண்டார்கள். இந்த நபரைத் தவிர வேறு எந்த குழுவையும் சஹாபிகள் எதிர்கொள்ளவில்லை. முஷ்ரிக்களுடைய கவனத்தை திசை திருப்புவதற்காகவே சஹாபிகள் அனுப்பப்பட்டிருந்தார்கள். ஆகவே சஹாபிகள் அங்கிருந்து திரும்ப புறப்பட்டார்கள். அந்த காலகட்டத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் மக்காவை நோக்கி புறப்பட்டு விட்டார்கள் என்ற தகவல் இவர்களுக்கு கிடைத்த போது இவர்களும் அந்தப் பக்கமாக பயணம் செய்து வழியில் அன்னாரை சந்தித்து அன்னாருடன் இணைந்து கொண்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்களிடம் ஒரு நபர் கொல்லப்பட்ட விஷயத்தையும் அனைத்து சம்பவங்களையும் எடுத்துக் கூறினார்கள். வரலாற்று நூலில் எழுதப்பட்டுள்ளதென்னவென்றால், அப்போது இந்த வசனம் இறங்கியது;

“நம்பிக்கையாளர்களே! நீங்கள் அல்லாஹ்வின் வழியில் பயணம் செய்யும்போது நன்றாக விசாரணை செய்துகொள்ளுங்கள். எவரும் உங்களுக்கு ஸலாம் கூறினால் (அவரிடம்) நீர் நம்பிக்கை கொண்டவர் இல்லை எனக்கூறாதீர்கள். நீங்கள் உலக வாழ்க்கைக்கான பொருளை விரும்புகின்றீர்கள் என்றால், அல்லாஹ்விடமோ சிறந்த பொருள்கள் மிகுதியாக உள்ளன. முன்னர் நீங்கள் அவ்வாறே இருந்தீர்கள். பின்னர் அல்லாஹ் உங்கள் மீது அருள் புரிந்தான். எனவே நீங்கள் நன்கு விசாரணை செய்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்து கொண்டிருப்பதை நன்கு அறிபவனாவான்.” (திருக்குர்ஆன் 4: 95)

ஏற்கனவே நான் கூறியது போன்று, இந்த படையெடுப்பு ஹிஜ்ரீ எட்டாம் ஆண்டு நிகழ்ந்தது. ஆனால் சூரா நிஸாவுடைய இந்த வசனத்தைக் குறித்து அதிகமான கருத்தொற்றுமை என்னவென்றால், இது ஹிஜ்ரத்துடைய மூன்றாவது வருடத்திற்கும் ஐந்தாவது வருடத்திற்கும் இடையில் இறங்கியது. இந்த சம்பவத்தை குறித்து தெரிய வந்தபோது பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த வசனத்தை ஓதி தம் விருப்பமின்மையை வெளிப்படுத்தி இருக்கலாம்!

இப்போது நான் ஜமாஅத்தின் சான்றோர், மகத்துவமிக்க ஆலிம், கிலாஃபத்தின் மீது அர்ப்பணிப்பு கொண்டவர், ஒப்பிட இயலாத மார்க்கத் தொண்டரைப் பற்றி எடுத்துக் கூறுவேன். அவர்கள் கடந்த நாட்களில் வஃபாத் ஆகி விட்டார்கள். அதேபோன்று, அர்ப்பணிப்புள்ள, தூய அஹ்மதி ஒருவரைக் குறித்தும் எடுத்துக் கூறுவேன். அவர்கள் சிறைவாசம் அனுபவித்து அங்கேயே வஃபாத் ஆகி இருக்கிறார்கள்.

**முதல் குறிப்பு மதிப்பிற்குரிய சைய்யித் மீர் மஹ்மூத் அஹ்மத் நாசிர் சாஹிப் அவர்களுடையதாகும்.** இவர்கள் ஹஸ்ரத் சைய்யித் மீர் முஹம்மத் இஸ்ஹாக் சாஹிப் (ரலி) அவர்களின் மகன் ஆவார்கள். கடந்த நாட்களில் 96 வயதில் வஃபாத் ஆகி இருக்கிறார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

மர்ஹூம் அவர்கள் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் சகோதரருடைய மகன் ஆவார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) மற்றும் ஹஸ்ரத் மர்யம் சித்தீகா சாஹிபா (ரலி) ஆகியோரின் மருமகன் ஆவார்கள். மர்ஹூம் அவர்கள் ஆரம்பக் கல்வியை காதியானில் கற்றார்கள். பிறகு, பஞ்சாப் யூனிவர்சிட்டியில் பி.ஏ முடித்தார்கள். மார்ச் 1944 ஆம் ஆண்டு தம் தந்தை ஹஸ்ரத் சைய்யித் மீர் முஹம்மத் இஸ்ஹாக் சாஹிப் (ரலி)

அவர்கள் மரணமடைந்த நாளில் வாழ்வை அர்ப்பணித்தார்கள். அப்போது மர்ஹூமுடைய வயது 14 ஆக இருந்தது.

மர்ஹூமுடைய ஜமாஅத் தொண்டுகள் என்னவென்றால், 1954 முதல் 1957 வரை இங்கு இங்கிலாந்தில் முபல்லிக் ஆக பணியாற்றியுள்ளார்கள். அந்த காலகட்டத்தில் SOAS அதாவது, school of Oriental and African Studies இல் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களின் வழிகாட்டுதலுக்கு ஏற்ப கல்வியும் கற்றார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களுடனே சேர்ந்து கல்வி கற்றுள்ளார்கள். 1957 முதல் 1959 வரை வகாலத்தே திவானில் ரிசர்வ் முபல்லிக் ஆக இருந்துள்ளார்கள். 1960 இல் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் ஆசிரியராக நியமிக்கப்பட்டார்கள். 1978 முதல் 1982 வரை அமெரிக்காவில் முபல்லிக் ஆக இருந்துள்ளார்கள். 1982 முதல் 1986 வரை ஸ்பெயினில் தொண்டாற்றக் கூடிய நல்வாய்ப்பை பெற்றார்கள். 1986 முதல் 1989 வரை வகீலுத் தஸ்னீஃப் ஆக பணியாற்றியிருக்கிறார்கள். 1986 முதல் 2010 வரை ரப்வாவிலுள்ள ஜாமிஆ அஹ்மதிய்யாவின் பிரின்சிபல் ஆக தொண்டாற்றியுள்ளார்கள். அந்த காலகட்டத்தில் 1994 முதல் ஜூலை 2001 வரை வகீலுத் தஃலீமாகவும் இருந்துள்ளார்கள். அதேபோன்று research cell உடைய இன்சார்ஜ் ஆகவும் இருந்துள்ளார்கள். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் சிலுவை சம்பவம் குறித்த cell உடைய இன்சார்ஜ் ஆக இருந்துள்ளார்கள். 2005 இல் நூர் ஃபவுண்டேஷன் ஏற்படுத்தப்பட்டபோது அதனுடைய தலைவராக நியமிக்கப்பட்டு இறுதி வரை அதே தொண்டில் இருந்தார்கள்.

மஜ்லிஸே இஃப்தாவுடைய (அதாவது, மார்க்க தீர்ப்பு கொடுக்கும் சபையின்) உறுப்பினராக இருந்துள்ளார்கள். குத்தாமுல் அஹ்மதிய்யாவிலும் பல்வேறு வகையில் தொண்டாற்றும் நல்வாய்ப்பு இவர்களுக்கு கிடைத்துள்ளது. முஹ்தமீம் ஆகவும், நாயிப் சத்ர் ஆகவும் இருந்துள்ளார்கள். கல்வி மைதானத்திலும் பரந்த அளவில் பெரும் தொண்டாற்றி இருக்கிறார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் திருக்குர்ஆன் மொழியாக்க பணியில் மர்ஹூம் அவர்கள் பெரும் ஒத்துழைப்பு வழங்கி இருக்கிறார்கள். சிஹாஹ் சித்தா எனும் ஆறு ஹதீஸ் கிரந்தங்களை முழுமையாக உருதுவில் மொழியாக்கம் செய்த பிறகு முஸ்னது அஹ்மத் பின் ஹம்பலுடைய மொழியாக்கம் செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. அதேபோன்று ஸஹீஹ் முஸ்லிமுடைய விளக்க உரையும் செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. ஷமாயிலே திர்மிதியுடைய மொழியாக்கமும் செய்துள்ளார்கள். பைபிளைக் குறித்து நிறைய அறிவுப்பூர்வமான கட்டுரைகளை எழுதி இருக்கிறார்கள். அதேபோன்று ஹஸ்ரத் ஈஸா (அலை) அவருடைய கஃபன் (புனித உடற்போர்வை) குறித்தும், ஈஸா களிம்பு குறித்தும், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் ஹிஜ்ரத் குறித்தும் மிக உயர்தரமான ஆய்வுகளையும் மேற்கொண்டுள்ளார்கள். மர்ஹூம் அவர்கள் எழுதிய நூல்களுள் அச்சடிக்கப்பட்டு வெளியான நூல்களில், சீரத்துன் நபி (ஸல்) என்ற நூலின் மூன்று தொகுதிகளும், நமது அன்பான தூதர் (ஸல்) அவர்களின் அழகிய விஷயங்கள் எனும் நூலும், தொழுகைக்குப் பிறகு தினந்தோறும் தர்ஸுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்புகளில் ‘365 நாட்கள்’ எனும் நூலும் அடங்கும்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் மர்ஹூமுடன் தம் மகளுடைய நிக்காஹ்வை நடத்தி வைத்தார்கள். அதேபோன்று ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் மர்ஹூமுடைய மகனின் நிக்காஹ்வை நடத்தி வைத்தார்கள்.

1990 இல் மர்ஹூம் மீது ஒரு வழக்கு தொடரப்பட்டது. மஜ்லிஸே ஷூராவில் மர்ஹூம் அவர்கள் வெளிப்படுத்திய கருத்தின் அடிப்படையில் அந்த வழக்கு

பதியப்பட்டிருந்தது. நீதிபதி மர்ஹூமிடம், தாங்கள் சொற்பொழிவில் பெருமானார் (ஸல்) மற்றும் ஸஹாபிகளை அவமதித்துள்ளீர்கள் என்று கூறிய போது மர்ஹூம் அவர்கள், இது என் மீது சுமத்தப்பட்ட அவதூறு ஆகும். முழுக்க முழுக்க பொய்யாகும். பெருமானார் (ஸல்) மற்றும் சஹாபிகளை நான் உள்ளத்தால் மதிக்கிறேன். அன்னாருடைய தூதுத்துவத்தின் மீது உறுதியான நம்பிக்கை வைத்திருக்கிறேன் என்று கூறினார்கள். நீதிபதிக்கு முன்னால் மிகத் துணிவுடன் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்.

மார்க்க அறிவைப் பொறுத்தவரை, இஸ்லாம் மட்டுமின்றி யூத மார்க்கம், கிறிஸ்தவ மார்க்கம் போன்றவற்றையும் ஆராய்ந்து வந்தார்கள். மார்க்கங்களுக்கு இடையிலான ஒப்பீட்டில் அவர்களுக்கு குறிப்பான புலமை இருந்தது. திருக்குர்ஆன், பெருமானார் (ஸல்) அவர்களின் நடைமுறை, சஹீஹான ஹதீஸ்கள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) மற்றும் அன்னாருடைய கலீஃபாக்களின் நூல்களில் இருந்து வழிகாட்டல் பெற வேண்டும் என்று எப்பொழுதும் அறிவுறுத்தி வந்தார்கள்.

முபஷ்ஷிர் அயாஸ் சாஹிப் அவர்கள் எழுதுகிறார்கள்: மர்ஹூம் மீர் சாஹிப் அவர்கள் மிகவும் அப்பழுக்கற்ற தூய வாழ்வை வாழ்ந்துள்ளார்கள். மிகவும் மேலான, அதேநேரம் தன்னடக்கம் கொண்டவராகவும், பணிவான இயல்பை கொண்டுவராகவும், போதுமென்ற மனமுடையவராகவும், இறை நம்பிக்கையின் ஓர் உயரிய முன்மாதிரியாகவும் இருந்தார்கள். அறிவு ஞானத்தின் ஒரு கடலாக இருந்தார்கள். மிகப்பெரும் அறிஞராக இருந்தார்கள். திருக்குர்ஆன் விரிவுரையாளராகவும் இருந்தார்கள்; ஹதீஸ் வல்லுனராகவும் இருந்தார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாற்றில் மர்ஹூம் அவர்கள் எவ்வாறான நற்பேறு பெற்ற முதல் ஆலிம் என்றால், திருக்குர்ஆனுடைய மொழியாக்கத்துடன், முழுமையாக சிஹாஹ் சித்தாவுடைய உருது மொழியாக்கத்தையும் செய்யக்கூடிய நல்வாய்ப்பைப் பெற்றிருந்தார்கள்.

தன்வீர் நாசிர் சாஹிப் முரப்பி காதியான் எழுதுகிறார்: மர்ஹூமுடைய ஒரு நினைவு எப்போதும் எனதுள்ளத்தில் உள்ளது. அது என்னவென்றால், ஒரு நாள் காதியானில் மஸ்ஜிது முபாரக்கில் நான் அமர்ந்திருந்தேன். அப்போது மீர் சாஹிப் அவர்கள் பள்ளிவாசலுடைய முதல் ஸஃப்பில் உலாவிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இவ்வாறு இங்குமங்கும் நடந்தவாறு துஆக்களை ஓதிக் கொண்டிருப்பதைக் காணும்போது எனக்கு அது மிகவும் நன்றாக இருந்தது. கொஞ்ச நேரத்திற்கு பிறகு எனக்கு தைரியம் வந்த பிறகு நான் மர்ஹூமிடம் சென்று, தாங்கள் பள்ளிவாசலுடைய முதல் ஸஃப்பில் நடந்து கொண்டிருக்கிறீர்களே அதற்கான காரணம் என்ன என்று கேட்டேன். அதற்கு மர்ஹூம் அவர்கள், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த இடத்தில் இங்குமங்கும் நடந்ததை நான் கண்டுள்ளேன்; நானும் அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றியவாறு உலாவிக் கொண்டிருக்கிறேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடன் ஒரு வினோதமான நேசம் இருந்தது.

எவ்வாறிருப்பினும் கிலாஃபத்துடைய ஒரு மகத்தான உதவியாளராகவும், ஒத்துழைப்பாளராகவும் இருந்தார்கள். உயிரைத் தியாகம் செய்யக்கூடியவராக இருந்தார்கள். சொல்லுக்கு சொல் செயல்படக் கூடியவராக இருந்தார்கள். நன்றி உணர்வுள்ளவராக இருந்தார்கள். எவ்வாறான வல்லமை மிக்க உதவியாளராக இருந்தார்கள் என்றால் இப்படிப்பட்டவர்கள் குறைவாகத்தான் காணக் கிடைக்கிறார்கள்! செயல்படக்கூடிய ஆலிமாக இருந்தார்கள். இப்போது இவர்களைப் போன்ற எந்தவோர் உதாரணமும் எனக்கு தென்படவில்லை. அல்லாஹ்வின் கருவூலத்தில் எந்த குறையும் ஏற்படுவதில்லை.

இவ்வாறான முன்மாதிரிகளை அல்லாஹ் இனிமேலும் பிறக்கச் செய்வானாக! இவ்வாறான நன்றி உணர்வுள்ள, கலப்பற்ற, இறையச்சத்தின்படி நடக்கின்ற, உதவியாளர்களை அல்லாஹ் அஹ்மதிய்யா கிலாஃபத்திற்கு வழங்கிக் கொண்டே இருப்பானாக!

**இரண்டாவது நற்குறிப்பு டாக்டர் தாஹிர் மஹ்மூத் சாஹிப் அவர்களைப் பற்றியதாகும்.** இவர்கள் கடந்த நாட்களில் சிறைவாசத்தின் போதே மரணமடைந்துள்ளார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். மர்ஹூம் அவர்கள் குலாம் ரசூல் சாஹிப் அவர்களின் மகன் ஆவார்கள். கராச்சியைச் சார்ந்தவர் ஆவார்கள். மர்ஹூம் டாக்டர் தாஹிர் மஹ்மூத் சாஹிப் அவர்கள் கராச்சியிலுள்ள மலேர் காலனியின் சத்ர் ஆவார்கள். மர்ஹூம் மீதும் இரு அஹ்மதிகளின் மீதும் கராச்சி மலேர் காலனியில் கட்டப்படும் பள்ளிவாசலின் தோற்றம் தொடர்பாகவும் அங்கு ஜுமுஆ தொழுததற்காகவும் வழக்கு தொடரப்பட்டு கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் எதிரிகளின் ஒரு கூட்டம் மர்ஹூம் அவர்களை தாக்கியுள்ளது. போலீஸ் ஸ்டேஷனிலும் இவர்கள் மீது கடுமை காட்டப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) மற்றும் கலீஃபாக்களுக்கு எதிராக தீய சொற்களை கூறுமாறு கட்டாயப்படுத்தப்பட்டுள்ளார்கள். ஆனால், இவர்கள் உறுதியாக நின்றார்கள். இரண்டு மாதம் ஜெயிலில் இருந்தார்கள். மரணத்திற்கு சில நாட்களுக்கு முன்பு இவர்களுடைய சிறுநீரகத்தில் நோய் தொற்று ஏற்பட்டதன் காரணமாக உடல்நிலை மோசமானது. பிறகு அவர்கள் அங்கிருந்து ஹாஸ்பிடலுக்கு அனுப்பப்பட்டு அங்கு வஃபாத் ஆகியுள்ளார்கள். வஃபாத்தின் போது ஹாஸ்பிடலிலும் அவர்களுக்கு கை விலங்குகள் போடப்பட்டிருந்தன. சிறைவாசத்தின் துன்பங்களை எதிர்கொண்டுள்ளார்கள். ஆகவே, இந்த வகையில் இவர்களுக்கு ஷஹாதத் எனும் அந்தஸ்துதான் கிடைக்கிறது.

வஸிய்யத் அமைப்பிலும் இணைந்துள்ளார்கள். சத்ராகவும், செக்ரட்டரி தஃவத்தே இலல்லாஹ்வாகவும் தொண்டாற்றியுள்ளார்கள். மர்ஹூம் அவர்கள் தமக்குப் பின்னால் தம்முடைய மனைவி மதிப்பிற்குரிய முபஷ்ஷிரா சாஹிபா அவர்களையும், ஒரு மகளையும், 3 மகன்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள்.

*ஹுஸூர் அவர்கள் குத்பாவின் இறுதியில், (ஜுமுஆ) தொழுகைக்குப் பிறகு இவர்களின் ஜனாஸா தொழுகையை தொழ வைப்பதாக கூறினார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَن يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهُ
وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى
الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)